சந்தாதாரரின் கவனத்திற்கு:
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத „ „ 4-50
3 மாத „ „ 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"எமது நாளாந்த பெலவீனங்களைக் குணப்படுத்தும் நாளாந்த அவுஷதமாகத் தேவநற்கருணை விளங்குகிறது"
12-ம் பத்திநாதர்.

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 30-ம் இல.

# உகண்டா சென்று திரும்பினார் பரிசுத்த தந்தை

சென்ற ஆடி மாதம் 31ஆம் திகதி ரோமாபுரியைவிட்டு விமானமார்க்கமாக உகண்டா தேசம் சென்று அங்கு பல வைபவங்களிலும் பங்குபற்றிய தன்பின் 52 மணித்தியாலங்களில் தனது பிரயாணத்தை முடித்துப் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் ரோமாபுரி திரும்பி தமது கோடைகால வாசஸ்தலமாகிய காசில் கொன்டோல்பாவை மீளவும் அடைந்தார். பரிசுத்த தந்தையின் பிரயாணம் அவரைப் பல தேசங்களின்மேலாக இட்டுச்சென்றது அவை மோல்ரா, எகிப்து, சூடான் முதலியனவாம்.

## குதூகல வரவேற்பு:

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பருக்கு ஆபிரிக்காவில் அளிக்கப்பட்ட வரவேற்பைப்போல் முன்னொருபோதும் அக் கண்டத்தில் எவருக்கும் அளிக்கப்படவில்லை. அவரைக் கொண்டுசென்ற இத்தாலியதேச ஜெட் விமானம் உகண்டா தேச விக்ரோறியா எனப்படும் ஏரிக்கரையருகிலுள்ள என்ரேபே விமானத்தளத்தையடைந்ததும் அங்குள்ள மக்கள் அகமகிழ்ச்சியினால் பொங்கிவழிந்தனர். அத்தேச ஜனாதிபதி ஒப்போட்டோ அவர்கள் அரச மரியாதையுடன் பாப்பரசரை வரவேற்றார். விமானதளம் சனத்திரளால் தேம்பி வழிந்தது. அவ்வாறே அவ்விடத்திலிருந்து 20 மைலுக்கு அப்பாலுள்ள தலைநகரமாகிய கம்பாளா நகரத்துக்கு அவரை இட்டுச்சென்ற வழியும் மக்கட்திரளினால் நிரம்பியிருந்தது. ஆபிரிக்க மக்கள் தமது சுதேச உடைகளணிந்து பாட்டுக்களைப் பாடி, ஆடல்களை ஆடி, பூக்கள் தெளித்து, மேளங்கள் கொட்டி இலைகுழைகளை அசைத்து பலவகை ஆரவாரங்கள் செய்து தமது அன்பைப் பாப்பரசருக்கு எடுத்துக் காட்டினர். பரிசுத்த தந்தையும் தான் செய்த நெடுந்தூரப் பயணத்தினால் ஆகிய களைப்பையும் பொருட்படுத்தாது திறந்த மோட்டார் இரதத்தில் நின்றவண்ணமாய் அன்புததும்பும் முகத்துடன் மக்கட்சமுத்திரத்தை ஆசீர்வதித்துக் கொண்டே சென்றார். நகர மாதேவாலயத்துக்குச் செல்லுமுன் அந்நகர அதிமேற்றிராணியாரின் இல்லத்துக்குச் சென்று, சில நிமிட ஓய்வின்பின் பரி. தந்தை தேவாலயத்துக்குச்சென்றார். அன்று அவரைக்கண்டு மகிழ்ந்த சனத்திரள் ஒரு கோடிக்குமேல் எனக் கூறப்படுகின்றது.

## கோவிற் பிரசங்கம்:

மாதேவாலயத்தில் நடந்த வழிபாட்டின்போது பரிசுத்த தந்தை செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"இன்றுடன் ஆபிரிக்க கத்தோலிக்க வளர்ச்சியில் ஒரு சகாப்தம் முடிவு எய்துகின்றது. இதுகால வரையும் ஐரோப்பிய குருமாரால் பரிபாலிக்கப்பட்ட ஆபிரிக்க திருச்சபை இனிமேல் தன் சுதேசமக்களாகிய குருமார், மேற்றிராணிமாராலேயே பரிபாலிக்கப்படும். எனினும் திருச்சபை ஒன்றே. விசுவாசம் ஒன்றே சுதந்தரத்தை நீங்கள் சிறப்பாக உபயோகிக்க வேண்டும். மிதமிஞ்சிய தேசாபிமானம், சுதந்தரவேட்கை உமது சமயஅனுசரணைக்குத் தடையாக இருக்கப்படாது. திருச்சபை ஆபிரிக்கமயமாகிய பொழுதிலும் அதன் விசுவாசசத்தியங்கள் முன்போலவே என்றும் இருக்கவேண்டும்."

## மறு முக்கிய நிகழ்ச்சிகள்:

பரிசுத்த தந்தை உகண்டாவில் செலவுசெய்த சில மணித்தியாலங்களுள் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். உகண்டா தேச வேதசாட்சிகளின் பெயரால் மாதேவாலயத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கலாநிதி பி. சவரிமுத்து அவர்களின் சுபமிருத்து

நினைக்கவே நெஞ்சம் திக்கிடுகிறது! சிந்திக்கவே உள்ளம் திகில்கொள்கிறது! எழுதவோ கை வருவதாயில்லை! எண்ணவோ கவலை இடந்தருவதாயில்லை! ஐயையோ! மின்னாமல், முழங்காமல் கருமம் நிகழ்ந்துவிட்டதே. தமது புன்னகையால், இன்மொழியால், கல்வித்திறனால், கலைப்பணியால், தேவபக்தி, குருபக்தியால், வேதானுசாரத்தால், சமூக தொண்டால், சமய சேவையால், வாக்கலங்காரப் பேச்சுத்திறமையால், எழுத்து வன்மையால், எதற்கும்மேலாகப் போதப்பொலிந்த தமது தோற்றத்தால், முகவசீகரத்தால் எல்லவர் உள்ளங்களையுமே ஈர்ந்து எவர்க்குமே ஓர் அன்பராய், நண்பராய் அருமை பெருமை வாய்ந்த முத்துக்களில் ஓர் ஆணிமுத்தாய் நம்மிடையே விளங்கியிருந்த பெருமகனார் கலாநிதி பி. சவரிமுத்து அவர்கள் நாம் எண்ணாத எதிர்பாராத விதமாய்ச் சென்ற 1-ம்திகதி வெள்ளிக்கிழமை அந்திவேளை மாணத்திரையில் மறைந்தாரெனும் அமங்கல செய்தியை அறியவந்ததே ஐயோ! மலையான மலை சரிந்ததேயென்று மலைத்தோம், திகைத்தோம், நெட்டுயிர்த்தோம், நிலை தளர்ந்தோம், மனமுளைந்தோம், கண்கலங்கினோம், கண்ணீர்சிந்தினோம். ஆமாம், அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்!

திரு. அ. ஞானப்பிரகாசம்
(இளைப்பாறிய
காவலன் ஆசிரியர்)

சூதுவாது சூழ்ச்சியறியாத சுத்தவுள்ளம்! இல்லை, ஒரு குழந்தை உள்ளம்படைத்தவராய்க் குழந்தைகள் முதல்



வளர்ந்தவர்கள் ஈறாகப் பல்லோராலும் 'சவரிமுத்து மாஸ்றர்' என அன்புபாராட்டி அருமைபாராட்டி அழைக்கப்பட்டுவந்த கலாநிதி சவரிமுத்துப்பெரியாரின் மறைவாலே ஈழத்தமிழுலகம் பெரிய கல்விமான் ஒருவரை இழந்தது. ஆசிரியஉலகில் பெரும் புகழீட்டியிருந்த ஓர் ஆசிரிய திலகம் மறைந்தது. மாணவருலகில் பிரபைகான்ற மாண்புமிக்க பேராசிரிய சுடரொன்று அஸ்தமித்தது. சமூக, சமய, தரும, கல்விச் சேவையாளருள் தகைமை சான்ற ஒரு முத்தானமுத்து ஒளி மங்கியது.

கலாநிதி சவிரிமுத்து அவர்கள் யாழ்ப்பாணத்திலே தாழையடி எனும் புராதன கிராமத்தில் இற்றைக்கு 56 வருடங்களின்முன் பிறந்தார். "தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் சுலோகத்திற்கமையத் தோன்றித் தாம் பிறந்த பதிக்கு ஒரு கருந்தனம்போன்று திகழ்ந்தார். சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். தமது கலைத்திறமை காரணமாக அதிலேயே ஓர் ஆசிரியராக நியமனம் பெற்றுக் கடமையாற்றி வரும்போது தொடர்ந்து படித்தார். படித்துக்கொண்டே போனார். அதன் விளைவாக லண்டன் பி. ஏ. பரீட்சையில் சிறப்பாக அரங்கேறினார். பின்னர் அரசாங்க கல்வித்துறையில் ஒரு போாசிரியராகக் கடமையாற்றி வரும்போது லண்டன் மாநகர் சென்று எம். ஏ. எனப்படும் கலா

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# திருச்சபையின் முதற் பெண் வேதகலாநிதி

"வேதகலாநிதி" என்னும் பட்டம் திருச்சபையினால் வேதகருமங்கள் பலவற்றைப்பற்றி ஆழமான சிந்தனையுடனும், தர்க்கரீதியுடனும் ஆராய்பவருக்கே கொடுக்கப்படுகின்றது. திருச்சபையின் சரிதத்தில் இத்தகைய கலாநிதிகள் சுமார் 80 பேரளவேஉளர். இதுவரையும் இவர்கள் யாவரும் ஆண்மக்களே. ஆனால் விரைவில் பெண்களிலும் இப்பட்டங்களைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவர்கள் இருக்கின்றனரென திருச்சபையின் திருச்சடங்குக் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர். அவிலாவின் தெரேசம்மாளே இப்பட்டத்துக்கு முதல் உரிய பெண்ணாவாரெனக் கூறப்படுகிறது. இவர் கார்மல்—கூட்டத்தைச் சேர்ந்தவர்— ஸ்பானிய தேசத்தவர்— இவருடன் விரைவில் வேறுஒருபெண்மணிக்கும் இப்பட்டம் அருளப்படலாமெனவும் வதந்திகள் உண்டு. அவர் சியென்னாவின் கத்தரீனம்மாளாம்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் ஆவணி 1-ம்தேதி மார்படைப்பினுல் சடுதியாகக் காலஞ் சென்ற பேராசிரியர் பி. சவரிமுத்துவின் சிறந்தகட்டுரைகள் கடந்த பல வருடங்களாகக் காவலனில் ஏறக்குறைய வாரந்தோறும் வெளி வந்ததென்பதை நேயர்கள் நன்கறிவார்கள். அவர் சமீபத்தில் எழுதிய கட்டுரைகளிற்சில இன்னும் பிரசுரிக்கப்பட வில்லை. அவை காலகதியில் பிரசுரிக்கப்படும். இந்தச் சிறந்த எழுத்தாளர் தாம் மரணிப்பதற்கு இரண்டு நாட்களுக்குமுதல் காவலனுக்குக் கடைசியாக எழுதிய "கிறிஸ்தவர்கள் மரணத்துக்குப் பயப்படவேண்டுமா?" என்ற கட்டுரையைக் கீழே பிரசுரிக்கிறேம். அமரரான அண்ணல் பி. சவரிமுத்து அவர்கள் இறுதியாத்திரையேகப் பிரியாவிடை பெறுவார்போல் 'காவலன்' வாசகர்க்கு எழுதிச்சென்ற மரண சாசனமோ? இந்த மணிமொழிகள் —ஆ-ர்.

# கிறிஸ்தவமக்கள் மரணத்துக்குப் பயப்பட வேண்டுமா?

உலகில் தோன்றிய மக்கள் யாபேரும் மறையவேண்டிய நியதியை நாம் தனிப்பட்ட முறையிலும், சரித்திரஉண்மைகளைக்கொண்டும் அறியக்கூடியதாயிருக்கிறது. மனிதாவதாரமெடுத்துப் பிறந்த எமதுஇரட்சகராகிய 2ஆம் ஆளாகிய சுதனுகிய சர்வேசுரனைகூடச் சாவுக்கு அடிமையானுர். "காலனை வெல்லக் கடவுளாலும் முடியாது" என்று பொதுவாக மக்கள் கூறுவதை நாம் கேட்டிருக்கிறேம்.

ஆம், பிறப்பும் இறப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல என்றும் ஒன்றேடொன்று சேர்ந்தே வருகின்றன. ஆனுல் ஒருவரின் சாவு "ஆறிலும்வரும், நூறிலும் வரும்." நாம் மரித்தோருக்காக ஒப்புக்கொடுக்கும் திவ்விய பூசைப்பலிவேளையில் பாடுவதுபோல, "இன்றைக்கோ நாளைக்கோ வரும்சாவு; உன்னையோ, என்னையோ கொல்லும்சாவு நாமறியோம்" என்பது மிகவும் உண்மையான ஒரு கூற்றன்றே.

ஆனுலும் பொதுவாக மக்கள் சாவுக்குப் பயந்துதான் வாழ்கின்றனர். இதற்கு ஒரு காரணம் மரணம் ஒருவருக்கு இவ்வுலக வாழ்க்கையின் முடிவைக் கொண்டுவருகிறது. அதன்நிமித்தம் ஒருவர் தான் சேகரித்த செல்வம், கட்டிய வீடு, வாங்கிய காணிபூமிகள், தான் அன்புடன் நேசித்துவந்த மனைவிமக்கள், இனசனர் ஆகியோர் சகலரையும் விட்டுப் பிரியவேண்டியகாலம் அண்மிவிட்டதேஎன்று அளவில்லாத சஞ்சலத்தை அடையமுடியும். இது மக்கள் யாபேரிலும் காணப்படும் ஒரு மனேநிலையாக இருந்தபோதிலும் — துக்ககரமானநிலையாயிருந்தபோதிலும் — சாவுக்கு மக்கள் பயப்படவேண்டியகாரணமொன்றுமே இல்லை. ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை இப்பூவுலகில் தற்காலிகமானது — நிரந்தரமற்றது. இவ்வாழ்வு முடிவுற்றதும் ஒரு நித்தியவாழ்வு ஆரம்பிக்கிறது என்றஉண்மையைத் திடமாக மனிதன் விசுவசித்து வாழவேண்டியவனுயிருக்கிறுன். ஆனுல் அந்நித்திய வாழ்வின் தன்மை இவ்வுலகில் ஒவ்வொருவனும் வாழும்பொழுது அவன்செய்த பாவபுண்ணியங்களுக் கேற்றதாக இருக்கும் என்று அவன் நன்கு விளங்குகிறுன். "மனிதன் ஏன்படைக்கப்பட்டான்?" என்றகேள்விக்குக் கொடுக்கப்படும் விடையைக் கிறிஸ்தவர்கள் சகலரும் நன்கறிவர். "இவ்வுலகில் தேவனை அறிந்து அவரை நேசித்துச் சேவிக்கவும் மறுவுலகில் அவருடன் நித்தியத்துக்கும் மோட்சபேரின்பத்தை அனுபவித்து வாழவுமே" என்றஉண்மையைச் சிறுவயதிலிருந்தே நாம் கேட்டிருக்கிறேம். உணர்ந்திருக்கிறேம். அதற்கிலையய வாழ்ந்து வந்திருக்கிறேம் — வருகிறேம்.

— பி. சவரிமுத்து

எனவே ஒரு கிறிஸ்தவனுக்குச் சாவு மறுவுலகவாழ்க்கையின் ஆரம்பமாயிருக்கிறது. அவன் அச்சப்பட வேண்டியதற்கு ஒரேயொரு காரணமுண்டு. அது என்னவெனின் அவனுடைய ஆத்துமகிலை பாவங்களைப்புரிந்து பரமதேவனை இவ்வுலக வாழ்க்கையின்போது வெறுத்துவந்த மக்கள் தங்கள் எதிர்கால நித்தியஆக்கினையைப்பற்றி உண்மையாகவே அச்சமடையவேண்டித்தான் இருக்கும். ஒரு புனித வாழ்வை இப்பூவுலகில்வாழும் ஒருவன் பரலோக இராச்சியத்தைத் தனக்குப் பெற்றுத்தரும் பிரவேசக் கதவுஎன்றே சாவை எண்ணுவான். அவன் மரணத்தை வரவேற்பான். அவனும் அர்ச். சின்னப்பரோடு சேர்ந்து "மரணமே உன் கொடுக்கு எங்கே? மரணமே உன் வெற்றி எங்கே?" என்று மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் கூறமுடியும். ஆனுல் பாவங்கள்நிறைந்த— பஞ்சமா பாதகங்களைப்புரிந்த ஓர் ஆத்துமமானது தனது அந்திய வேளையில் அடையும் துன்ப துயரங்களுக்கெல்லாம் அளவு உண்டோ? வேடன்வலையில் அகப்பட்ட மான்போல் தனக்கு வரவிருக்கும் நித்திய ஆக்கினையைப்பற்றி அவன்படும் துன்ப துயரங்கள் தான் எம்மட்டு?

எனவே தூய ஆத்துமாக்கள் தங்கள் மரணவேளை கிட்டியதும் மிகவும்ஆனந்தத்துடன் இறைவனடி சேருவோமே என்ற ஸ்திரமான நம்பிக்கையுடன் தங்கள் பிராணனைப் பரம பிதாவிடம் ஒப்படைக்கின்றனர். ஆனுல் சாவான பாவ நிலையில் வாழும் மக்களின் கதி தான் என்ன? அவர்கள் தங்கள் மரணநேரம் கிட்டியதும் கள்வரைப்போல விழித்துக் கலங்கி நிற்பர். தங்கள் கதியை — நித்திய ஆக்கினையை உணர்ந்து கண்ணீரும் பற்கடிப்பும் நிரம்பியவர்களாகக் காட்சியளிப்பார்கள். தங்கள் பிறந்த நாளையும், தங்கள் பூவுலகவாழ்வையும் சபித்துத் தங்கள் நித்திய கேட்டைத் தெளிவுடன் காண்பார்கள்.

தேவனின் சமுகத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்ள — பிரித்துக்கொள்ள வழிதேடுவார்கள். "சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு அகன்று போங்கள்......" என்ற எமது இரட்சகரும், நடுவருமாகிய யேசுக்கிறீஸ்துநாதரின் தீர்ப்பைக்கேட்டு அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாய்ப் புலம்புவதை எப்படிஒருவர் பார்த்துச் சகிக்கமுடியும்? இந்த உண்மையைத்தான் அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் I: 15,51–57 "இதோ உங்களுக்கு ஒரு இரகசியத்தை அறிவிக்கிறேன். எல்லோரும் உயிர்ப்போம் என்பது உள்ளதுதான். ஆகிலும் எல்லோரிலும் மாற்றம் உண்டாக மாட்டாது. கடைசி எக்காளக் தொனிக்கவே (ஆம், எக்காளந் தொனிக்கும்) மரித்தவர்கள் அழியாமையோடு உயிர்ப்பார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறுர். எனவே, மரணத்துக்கு மக்கள் பயப்படவேண்டியவர்களல்ல. ஆனுல் அதன் வருகைக்கு அவர்கள் எந்நேரமும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

---

**திருமதி தாயிசம்மா மரியாம்பிள்ளை அவர்களின் முதலாம்வருட மரணஞாபகம்**

பிறப்பு: 8-10-1926 இறப்பு: 15-8-1968

நித்திய பிதாவே! உம்முடைய திருக்குமாரன் எங்களுக்காகச் சிந்திய விலைமதிக்க முடியாத திருஇரத்தத்தைப் பார்த்து, மரித்த விசுவாசி தாயிசம்மா மரியாம்பிள்ளையினுடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஊறணி புனித அந்தோனியார் தேவாலயத்தில் 16-8-69 சனிக்கிழமை ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக்கண்ணுறும் யாவரும் இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேம்.

இவவை இழந்து துன்புறும்: கணவன், பிள்ளைகள், பெற்றேர், சகோதரர்கள்.

ஊறணி, காங்கேசன்துறை.

---

## இடமாற்றம்

இதுகாலவரை
87, புதிய சோனக தெரு (*New Moor Street*),
கொழும்பு – 12
என்ற விலாசத்தில் இருந்துவந்த
எமது ஸ்தாபனம்

**வஸ்தியன் & கம்பெனி Ltd.**

தற்போது
**187, காலி வீதி** (*Galle Road*), **கொள்ளுப்பிட்டி – 3**
என்ற விலாசத்துக்கு இடம் பெயர்ந்துள்ளதால்,
எமது வாடிக்கையாளர்
இனிமேல் தற்போதைய முகவரியில்
தொடர்புகொள்ளவும்.

# கலாநிதி பி. சவரிமுத்து அவர்களின் சுபமிருத்து

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிதிப் பட்டமும், கலையில் டிப்ளோமாவும் பெற்றுத் திரும்பியபின் முறையே பலாலி, அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைகளின் அதிபராகவும், இறுதியாக யாழ்ப்பாணம் குருநகர் சென் யேம்ஸ் மகா வித்தியாலய தலைவராகவும்விளங்கியிருந்து சீராய்ச் சிறப்பாய் நடாத்திய கல்விச் சேவையாலே பேரும் புகழும் பெற்று விளங்கினுர்.

யாழ்ப்பாணக் கத்தோலிக்க பிரமுகர்களில் ஒருவரென்றமட்டிலே சென்ற 1968–ம் ஆண்டு கொழும்பில் நிகழ்ந்த சினெட் சங்கத்துக்கு யாழ்ப்பாணப் பிரதிநிதியாகச் சமுகமளித்தார். யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் துணைச் செயலாளராய், இலங்கைக் கத்தோலிக்க ஐக்கிய சங்கத்திலே யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் பிரதிநிதியாய், சென்வின் சென்ற் டிபோல்தருமசபைத் தனிச் சங்கத்தின் முன்னுள் செயலாளராயிருந்து அவர் நம் திருமறைக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன என்க! பொதுவிலே நமது மேற்றிராசனத்தில் அவர் ஈடுபடாத இயக்கமேயில்லை எனலாம்.

சமய, சமூக சம்பந்தமான தமது கட்டுரைகளாலும், பிறவரலாறுகளாலும் "கதலிக் மெசெஞ்சர்", "பாதுகாவலன்" பத்திரிகைகளைப் பரிமளிக்கச்செய்து வந்தார். ஆசிரியர்களின் விடுமுறைக் கழகங்களிலும், கருத்தரங்குகளிலும், மற்றும் சபைகளிலும், விழாக்கள் பலவற்றிலும் அறிவுவளர்ச்சி பெருக, உணர்ச்சிபெருக, கவர்ச்சிகரமாக,ஹாஸ்யமாகஅவர் ஆற்றிவந்த ஆணித்தரமான விரிவுரைகள், அறிவுரைகள், சொற்பெருக்குகளை விதந்து வியந்து பாராட்டாத அறிஞர்களும், பிறரும் இல்லை எனலாம்.

கடமை உணர்ச்சியிலே — உணர்ந்து ஊக்கமாகக்கடமையாற்றுவதிலே, சேவை உணர்ச்சியிலே — உறங்காது உத்வேகமாய்ச்சேவையாற்றுவதிலே, விடாமுயற்சியிலே —அகமும் முகமும் மலர்ந்து பலரையும் வரவேற்பதிலே, பெரியோரைக்கணிப்பதிலே, அன்னுரைக் கௌரவிப்பதிலே, எவரோடும் இன்பாக அன்பாகப் பேசிப் புழங்குவதிலே, பெருமை சிறுமை பாராது பிறர் வாழ்வுதாழ்வில் கலந்து கொள்வதிலே, பிறருக்கு உதவி ஒத்தாசை செய்வதிலே எவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகத்திகழ்ந்த பேராசிரியர் அவர்கள் தீர்க்காயுள்பெற்று இன்னும் சில வருடகாலமாவது எம்மிடையே சீவந்தராய் இருந்தாரில்லையே என்று எண்ணுந்தோறும் அம்மம்ம! மனம் புண்ணாய் வருந்துகின்றதே! என்செய்வோம்! அவர் வாழ்ந்திருக்க நாம் கொடுத்து வைக்கவில்லைப்போலும்.

மரித்தபின் அவர் சரீரம் இல்லத்தின் நடுச்சாலையில் வளர்த்தப்படிருக்கச் சமய, சாகிய பேதமின்றியே ஆசிரியர்களும், மாணவர்களும், அன்பர்களும், அனுதாபிகளும், குரவர்களும், கன்னியர்களும், பிறரும் படைதிரண்டாற்போன்று திரள் திரளாகச் சென்று தங்கள் இறுதி அஞ்சலியைச் சமர்ப்பித்து அவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிநின்றுர்கள். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4–30 மணிக்கு அவர் மேனி ஓர் அழகியபேழையில் வைக்கப்பட்டு மாபெரும் ஊர்வலமாக ஆசனக்கோவில் கொண்டு செல்லப்படவே நம்முதல்ஆயரும், துணை ஆயருமாக ஆண்டகைகள் இருவரும், முப்பதின்மருக்கு மேற்பட்ட குரவர்களும், முச்சபைகளைச் சேர்ந்த கன்னியர்கள் பலரும் வரவேற்கு முகமாக ஆலயவாயிலில் வழிகாத்திருக்க, ஆசிரியர்களும், மாணவர்களும்,பெரியோரும் பிரபலஸ்தர்களும், பிறருமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சமுகமளித்திருக்க, அவர் மைத்துனரான வண. ஈ. விஜயரத்தினம் சுவாமிகளால் அந்திம திருச்சடங்குகள் சம்பிரமமாக நிறைவேறியதும் சேமக்காலை கொண்டுசென்று ஒரு பெரும் தலைவருக்குரிய சம்பிரதாய வரிசைகளுடன் பிரலாப மத்தியிலே பூமிதானம் செய்யப்படலாயிற்று. தம் பூதவுடம்பு மறைந்தும், புகழுடம்பு மறையாது நிறுவிநிற்கும் இப்பெருமகனை இழந்து ஆறாத் துயருற்று வருந்தும் பாரியாரோடும், பிள்ளைகளோடும், உறவினர், மற்றும் அனுதாபிகளோடும் நாமும் அனுதாபப்படுகின்றேம்.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமே டாட்டா!

— சி. எ. செல்வராசா —

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இருந்த பசுவுக்கும், இன்று எம் மத்தியில் நடமாடும் பசுவுக்கும் என்ன வித்தியாசம்? அன்று இருந்ததுபோலவே, இன்றும் இருக்கிறது. கிடைத்த இடத்தில் உண்டு, படுத்த இடத்தில் உறங்கி, எழுந்த இடத்தில் நடமாடுகிறது. அன்று ஈந்த நிறம், குணம், மணம் நிறைந்த அதே பாலைத்தான் இன்றும் தருகிறது. அது வாழ்க்கையில் முன்னேறுவதில்லை — முன்னேற நினைப்பதுமில்லை — அவசியமுமில்லை.

ஆனால் நாம் மனிதர்கள் — ஆறு அறிவு உடையவர்கள். அந்தப் பசுவைப்போல இருக்கமுடியுமா? எப்படி? வாழ்க்கையில் நாம், ஏன் நம் சமூகம், முன்னேற்றம் — நாகரீகம் — இவற்றைப்பற்றிச் சிந்திக்காமல் இருந்தால்கூட, நம்மை அறியாமலே, நாமும் எம் சமூகமும் முன்னேற்றப்பாதையிலே ஏறுநடை போடுவோருடன் தத்து நடைபோடுகிறோம். நாம் முன்னேற்றத்தைப்பற்றிக் கவலைகொள்ளாமல் முன்னேற்றப்பாதையின் ஓரத்தில் நடப்பட்டிருக்கும் மைல் கல்லில் உட்கார்ந்து கொண்டிருந்தாலும், எமக்கு முன் உள்ள முன்னேற்றப் பாதையிலே போவோரின், நடை — உடை — பேச்சு — போக்கு எல்லாம் எம்மைப் பார்த்து "டாட்டா" காட்டுகிறதே. நாம் என்ன வெறும் சடங்களா அவற்றைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க. நம் முன்னோர் — பெற்றோர் — உறவினர் — வாழ்ந்ததுபோல நாமும் வாழவேண்டுமென்று என்ன கட்டாயம். எங்கு எழுதிவைத்திருக்கிறது. நாம் முன்னேறுவதற்கு எவருடைய சுரங்கங்களைச் சுரண்டுகிறோம்? அப்படியானால் ஏன் நம் சமூகமுன்னேற்றத்தைப் பார்த்து, மற்றவர்களுக்குக் கவலை — ஏக்கம் — நக்கல் — நையாண்டி. இதோ இந்த 'மினிஸ்கேட்' துணி பெரிய அண்ணா இந்தியாவிலிருந்து வரும்போது வாங்கிவந்தது. இந்த "ரிஸ்ட்வாச்" என் சின்ன அண்ணன் 'சுவிற்சர்லாந்திலிருந்து வாங்கி வந்தது. இந்த 'கைப்பை' நான் கொழும்பில் வாங்கியது. இந்த செருப்பு மாமா எனக்கு வாங்கித்தந்த 'பேத்டே பிறசன்ட்', நான் உபயோகிக்கும் 'ஹெயர் ஆயில்' முதல் 'லிப்ஸ்டிக்' வரை என் அப்பா உழைத்த உழைப்பின் பயன். எம்மைப்பற்றி எவரும் கவலை அடைய வேண்டாம். மனிதனைப் படைத்தது இறைவன். சமூகத்தைப் படைத்தது மனிதன். ஆனால் சமூகத்தைப் பிரித்ததுயார்? யாராக இருக்கலாம். பிரிந்துவிட்டது சமூகம் இனி அது ஒன்றுசேருமா? எப்படி?

என் பாட்டியின் பெயர் விக்டோரியா. ஆனால் அந்தச் சமூகம் அழைப்பது, வித்தோரி என்று ஏன்? அன்று நடந்த சம்பவம்! "எடி வித்தோரி வீட்டிலே நாலு கொத்து நெல்லுக் கிடக்கடி அதை எல்லுப்போலே குத்தித்தாடி!" வேலியில் நின்றுகொண்டு கட்டளையிட்டாள் அந்த மகாராணி. பாட்டி எழுந்தாள். குறுக்குக்கட்டை அவிழ்த்து இறுக்கிக்கட்டிக்கொண்டு நடந்தாள். "ஆச்சி நில்" பெரியண்ணா அலறினான். "எங்கு போகிறாய்" சின்ன அண்ணன் துடித்தான். "ஆச்சி உள்ளே போணை" குறுக்கிட்டேன் நான். குசினியில் இருந்து வெளியே வந்த அம்மா, அலறிக்கொண்டிருந்த 'ரேடியோ'வை மூடிவிட்டு, அலறத் தொடங்கினாள். "ஏனணை ஆத்தை அவளவை வீட்டிலே ஐந்து குமருகள் இருக்கல்லே. அதுகளுக்குக் கையில்லையே நாலுகொத்து நெல்லு குத்த, இவ போறா அவளவைக்கு வேலைசெய்ய. ஆச்சி பாவம். எல்லோரும் போட்டு நெருக்கினால் அது என்ன செய்யும். பேசாமல் வந்து பாக்கு உரலை எடுத்தது. பாக்கு உரலும் வாயும் தாளம்போட மெள்ள சொல்லிச்சுது தன் தத்துவத்தை. "நீங்கள் தலையணி உறையளோடை திரியிறியோவே, கல் வீட்டில் 'றேடியோ' கேட்டுக்கொண்டிருக்கிறியோவே, இதெல்லாம் ஆராலே. நான் தானே உங்களை வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்தனான். அதுகள் வீட்டுச் சோறுதானே உங்களை வளர்த்தது. இப்பவெல்லே உங்களுக்கு இந்த எடுப்புச்சாய்புகள் வந்தது ஆச்சியின் நடுங்குங் கரங்கள் பாக்குரலை முத்தமிட்டன சாவியால்.

"போதுமணே போதும் அது ஒரு காலம், இது ஒரு காலம். அண்டைக்கு இருந்ததுபோல இண்டைக்கும் இருக்கவேண்டுமென்று யார் சொன்னது. இப்ப அவையள் எங்களிட்டை வரவேணும் தெரியுமே? வந்தாலும் நாங்கள் தட்டுவத்திலை சோறு கொடுக்க மாட்டம்; 'எவர்சில்வர் பிளேட்டிலை' நூடில்சும், புடினும் கொடுப்பம். அவர்களுக்கு நூடில்ஸ் என்ன விலையெண்டு தெரியுமே? புடின் எண்டால் என்னெண்டு தெரியுமோ?

"பிள்ளை நேரம் என்ன?" பக்கத்திலிருந்த பெண் கேட்டாள்.

"எட்டரை."

இனி என்னால் இதைப்பற்றிச் சிந்திக்க முடியாது. சிந்தனையைக் கலைத்துவிட்டாளே நேரம் கேட்ட பெண். பஸ் ஓடிக்கொண்டிருந்தது, யாழ்நகரை நோக்கி. கவலையை ஒழித்து யன்னலில் தலையைச் சாய்த்துக்கொண்டிருந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். உயர்ந்து வளர்ந்திருந்த தென்னையும், பனையும் தலையசைத்து என்னை வழியனுப்பிக்கொண்டிருந்தன. வயல் வெளிகள் எல்லாம் வெங்காயம் செழித்து வளர்ந்து தார்பாச்சி பச்சைக் கம்பளம்போல பரந்திருந்தது. அவற்றின் இதயமாகிய கிணற்றிலிருந்து, ஜீவநாளங்களாகிய வாய்க்கால்கள் வளைந்தும், நெளிந்தும் செல்கிறது. பஸ்சின் பின்பக்கத்தில் ஏதோ இரைச்சல். திரும்பிப் பார்த்தேன் கண்டக்டருக்கும் ஒரு பிரயாணிக்கும் கொழுவல். கண்டக்டரின் வாயிலிருந்து புறப்பட்டது வெடிகுண்டு போன்ற வார்த்தைகள் சங்கிலித் தொடர்போல. ஆனால் அக் கடைசி வார்த்தை, "கீழே இறங்கடாகிழ்சாதிப்பயலே." அது என்ன வார்த்தை எத்தனை புத்தகங்கள் அகராதிகள் படித்திருக்கிறேன் எதிலும் இவ்வார்த்தை இல்லையே ஏன்? இதுவரை சிறிது மறைந்திருந்த கவலை தொடர்கிறது இதயத்தில். நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்போது, நெல்லுக்குத்த ஆச்சியைக் கூப்பிட்ட மகாராணியார் வீட்டுக்கு முன்னால் உள்ள தெருவால்தான் வந்தேன். அதே மகாராணி தன் வீட்டு முத்தத்தில் நின்று என்னை நோக்கி மறைமுகமாக அனுப்பிக்கொண்டிருந்தாள் சொற்பாணங்களை. "எப்பவடி செருப்பைக் கண்டனீங்கள்? எப்பவடி முன் உடுப்பு உடுத்து பழகினனீங்கள்? இப்ப 'மினிஸ்கேட்' போடுறியேவே. எப்ப வந்தது இந்த அன்னநடை, தின்ன வழியில்லாமல் திரிந்ததுகள் இப்ப குதி உயர்ந்த செருப்பு போடினம்" அவ்வ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஒரே வாக்கியம்

— M. பேர்க்மான்ஸ்

அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அந்தப் பார்வை... பார்வையா அது? நல்லதனமே அண்டவிடாமல் தடுக்கும் போர்வை அது! அவனுடைய 'பனைபிளக்கும் ஆப்பு' போன்ற பற்களின் சிரிப்பு... கண்ணியமானவர்களுக்கு மிளகாயின் எரிப்பு! அவனுடைய நடையும், உடையும் நடவடிக்கைகளும்... சை, அவன் ஒரு மிருகம்! சமுதாயத் துரோகி!!

அந்தத் துரோகியின் வலைக்குள் என் கணவருமல்லவா சிக்கிக்கொண்டு விட்டார். அவர் சிக்கிக்கொண்டு விட்டார் என்பதைவிட இந்தத் துரோகி சமயமறிந்து அவரைவசப்படுத்திக் கொண்டான் என்பதுதான் பொருந்தும். 'ஆள் குறைப்பு' காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட அவர், வேலைதேடும் படலத்தில் ஓராண்டை ஓட்டிவிட்டார். எவ்வேலையும் ஓடிவருவதாயில்லை. இச்சமயத்தில்தான் அந்த அயோக்கியன் பொறியைத் திறந்துவைத்தான். என்கணவரும் சிக்கிக் கொண்டார்.

அதன்பின் என் கணவருடைய குணம்முற்றிலும் மாறியது. என்னோடுகூட அதிகம் பேசுவதில்லை. வீட்டுக்கும் எப்போதாவது நினைத்தால் வருவதுண்டு. கைநிறையப் பணம் புரள ஆரம்பித்தது. கடவுளைப் படிப்படியாக மறக்க ஆரம்பித்தார். இச்சமயத்தில் நான் தலையிட்டேன். "பணம்தான் எனக்குக் கடவுள்; அந்தக்கடவுளை மறக்கவே மாட்டேன். கவலை கொள்ளாதே" என்று ஏளனமாகக் கூறிவிட்டார். அவர் புதிதாக வாங்கிவந்த நகைகளை நான் அணிய மறுத்தபோது அவருடைய கோபம் ஆத்திரமாகமாறி, ஆத்திரம் அடியாக உருவெடுத்து என் கன்னத்தைத் தாக்குவதுண்டு. ஆனாலும் நேர்மையற்ற வழியிலே சம்பாதித்த பணத்தால் அடைந்தநகைகளை என்மேனியில் அணிவதால் ஏற்படும் மன உறுத்தலுக்கு இது ஒன்றும் அதிகமல்ல என்றுநினைத்து ஆறுதலடைவேன். என்றால் அவரைத் திருத்தவே முடியாது என்னும்நிலை ஏற்பட்டபோது, அவ்வேலையைக் கன்னிமரியிடம் ஒப்படைத்து விட்டு களைப்பாறினேன்.

ஆனால் சற்றுநேரத்துக்கு முன்னே அந்தத் துரோகியும், என் கணவரும் பேசிக்கொண்டிருந்தவைகளைச் சன்னல்பக்கமிருந்து நான் கேட்டபோது, என் உடல் புல்லரித்தது. குறுகிய இடத்தில் உற்பத்தியாகும் ஆறு ஓடிஓடி அகன்று பரந்துவிடுவதுபோல, சிறிய தவறில் ஆரம்பித்தது எவ்வளவு பெரிய தேசத் துரோகத்தில் போய் முடிந்திருக்கிறது! ஆண்டவா நாடு இன்றிருக்கின்ற நிலையில் அதை மேலும்மேலும் கீழான நிலைக்கு இழுத்துச் செல்லும் இந்தத் துரோகத் தனத்தில் என் கணவரும் பங்காளியா? என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே!

கள்ள ரூபாய் நோட்டுக்கள் அச்சடிக்கவேண்டிய வேலைகள் பூர்த்தியாகிவிட்டனவாம். முதலில் அச்சடித்த "மாதிரி நோட்டு"களை கையாள்மூலம் சிறிதுநேரத்தில் கொடுத்தனுப்புவதாகக்கூறிவிட்டுச் சென்றுவிட்டான் அந்தக் கயவன். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. என்ன செய்வதென்றும் தோன்றவில்லை. அனலிடைப்பட்ட புழுவெனத் துடித்துக் கொண்டிருந்தேன். நான் சொல்லி, முன்வைத்த காலை அவர் பின் வைக்கவும் போகிறதில்லை. மேற்கொண்டு வேலை ஓடவில்லை எனக்கு!

பீரோவிலிருந்த புத்தகங்களில் ஒன்றை உருவினேன். முன்வராந்தாவில் வந்துஅமர்ந்தேன். புத்தகத்தைத் திறக்க என்மனம் செல்லவில்லை. என் கணவர் எப்படியெல்லாம் மாறிவிட்டார் என்பதை நினைக்க நினைக்க என் கண்களில் கண்ணீர் துளித்தது. சிறிதுநேரத்தில் ஒருகார் மிகவேகமாக வந்து எங்கள் வீட்டுமுன் நின்றது. அதிலிருந்து ஒருமுடன் பாக்கப்பாக்க இறங்கி ஓடிவந்தான். அவன் கையிலும் ஒருபுத்தகம் இருந்தது. நேராக என்னிடம் ஓடிவந்த அவன், "இந்தப் புத்தகத்தை உங்கள் வீட்டுக்காரரிடம் கொடுத்து விடுங்கள். என்னை யாரோ துரத்திவருகிறார்கள். ப்ளீஸ்..." என்றுகூறி புத்தகத்தை என்னிடம் தந்துவிட்டு வேகமாகஓடிக் காரில் ஏறிக்கொண்டு பாய்ந்து சென்றுவிட்டான். நான் புத்தகத்தைப் பிடித்தவாறு சிந்தனைவயப்பட்டு நின்றுவிட்டேன். 'பளிச்'சென்று ஒருமின்னல் வெட்டியது என்மனதில். அந்தத் துரோகிக்கும் என் கணவருக்கும் தொடர்பு அற்றுப்போக வேண்டுமானால் இருவருக்குள்ளும் மனஸ்தாபம் ஏற்பட வேண்டும். அதற்கு ஒரு வழி — மாதிரிரூபாய் நோட்டுக்களடங்கிய இந்தப்புத்தகம் என் கணவரிடம் சேரக்கூடாது.

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் வெளியே நகர்ந்த என்னை "நிர்மலா" என்னும் இடிமுழக்கம்போன்ற என் கணவரின் குரல் தடுத்து நிறுத்தியது. உள்வாசலில் கோபம் கொப்புளிக்கும் கண்களோடு நின்றுகொண்டிருந்தார் அவர். குளிர் வருத்தும் குருவிபோல நடுநடுங்கி விட்டேன் நான். "எங்கே நகர்கிறாய் நிர்மலா? என்னிடமே உன் வேலையைக் காட்டுகிறாயா? கொடு அந்தப் புத்தகத்தை இப்படி!" அவருடைய கர்ஜனைக்கு முன்னே எதிர்த்துநிற்க எனக்கேது தைரியம்? பேசாமல் புத்தகத்தை அவர் கையில் கொடுத்துவிட்டேன். உடனே ஆவல்பொங்க அதைப் பிரித்தார் அவர். அதே பக்கத்திலேயே அவர் பார்வை நிலைகுத்தி நின்றது. அவருடைய இறுகியமுகம் மெல்லமெல்லக் குறுகியது. சிவந்த கண்களிலிருந்து நீர் முத்துக்கள் வெளிவந்து புத்தகத்தில் விழுந்து சிதறின.

அவரில் ஏற்பட்ட மாற்றத்தைக்கண்டு நான் அயந்து போய்விட்டேன். எனக்கு எதுவுமே விளங்கவில்லை. மெதுவாக அவர் அருகில்சென்று, அவர் பார்வை பதிந்திருந்த இடத்தில் என் கண்களைச் செலுத்தினேன். என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை. "உலகமெலாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், உன் ஆத்துமத்தை (பசாசுக்கு) இழந்து போவாயானால் அதனால் நீ அடையும் லாபமென்ன" என்னும் இறைவாக்கியம் அப்பக்கத்தில் பளிச்சிட்டது. அவ்வாக்கியத்தின் மேல்தான் என் கணவரின் கண்ணீர்த்துளிகள் பட்டு சிதறியிருந்தன. உடனே என்கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டினேன். என்ன ஆச்சரியம்! அதனுள்ளே 2, 5, 10 ரூபாய்த் தாள்கள் பல வைக்கப்பட்டிருந்தன.

"அத்தான், நான் தவறுதலாக... நற்செய்திப் புத்தகத்தைத் தந்துவிட்டேன். இதோ உங்களுக்கு வேண்டிய புத்தகம்." பயம் என் தொண்டையை அடைத்தது. என் கணவர் என்னை ஏறிட்டு நோக்கினார். அவர் பார்வையில் கோபம் — இல்லை! "நீ தவறுதலாகத் தந்திருக்கலாம் நிர்மலா. ஆனால் என் தவறுகளை உணர்ந்துகொள்ள உன்னுடைய தவறுதல் தான் காரணம். நான் பணத்தால் உலகை அடைய நினைத்தேன். அதற்கு ஆத்துமத்தை ஈடுவைக்காதே" என்று இடித்துரைத்து விட்டது அந்த 'ஒரே வாக்கியம்.' நிர்மலா, நான் என் தீயகுணங்களை இந்தக் கணமுதல் சுட்டெரித்து விட்டதுபோல, உன் கையிலிருக்கிற அந்தப் புத்தகத்தையும் அடுப்பில் கொண்டு போய்ப்போடு" என்றார். என் முகம் ஆனந்தப் பிரகாசமாவதை எதிரேயிருந்த நிலைக்கண்ணாடியில் கண்டேன். அதேசமயம் —

வெளியே சாலையில் ஒரு கார் பயங்கர வேகத்தில் புழுதி வாரியிறைத்துக்கொண்டுசென்றது. "அது பொலிஸ் கார்; இந்தப் புத்தகத்தைத் தந்தவனைத் துரத்திக்கொண்டு செல்கிறது" என்றார் என் கணவர்.

— நன்றி கத்தோலிக்கு சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianity—Advanced Level (G. C. E.)

# இரட்சணிய சரித்திரம்

## பழைய ஏற்பாடு

(முன் தொடர்ச்சி)

### இஸ்ராயேலர் பரிசோதிக்கப் பட்டுத் தண்டிக்கப்படல்

ஈற்றில் வாக்குத்தத்தப் பேழையை அதன் இடத்திலிருந்து எடுத்துக் கூடாரத்தையும் மடித்துக்கொண்டு பெரும் ஆரவாரத்துடன் கானான் நாட்டிற்குப் பிரயாணமானார்கள். சில நாட்களுக்குப்பின் அவர்கள் முறுமுறுக்கவும், புரட்சிசெய்யவும் மோயீசனுக்கெதிராகக் குற்றச்சாட்டுச் சொல்லவும் தொடங்கினர். மிகச் சிரமத்தோடு மோயீசன் அவர்களை அடக்கியதுடன் தேவன் அனுப்பிய துன்பதுரிதங்களை அவர்கள் நல்மனதுடன் ஏற்கவும்செய்தார். தேவனுடைய வல்லபத்தைக் காட்டவும், தான் மக்கள்மீது கொண்ட அன்பைக் காட்டவும் மோயீசன் பல புதுமைகளைச் செய்தார். ஈற்றில் இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட பூமியைச் சமீபித்தனர். உளவு பார்த்து வரும்படி மோயீசன் அனுப்பியவர்கள் கானான் நாட்டில் பெரும் இராட்சதர் இருப்பதாகவும் பலம் வாய்ந்த கோட்டைகள் அங்கு இருப்பதாகவும் செய்தி கொண்டுவந்தனர். இதைக் கேட்ட இஸ்ரவேலர் மீண்டும் முறுமுறுக்கத் தொடங்கினர். மோயீசனின் உயிருக்கு ஆபத்து வரும்போல் தோன்றியது (எண். 14: 1-4). தேவன் இவர்களின் அவிசுவாசத்தைத் தண்டிக்கும்முகமாக எகிப்தை விட்டு வெளியேறும்போது 20 வயதுக்கு மேற்பட்டோராயிருந்த இஸ்ரவேலர் எவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியில் பிரவேசிப்பதில்லை எனக் கூறினர். ஆகையால், 40 வருடங்களுக்கு இஸ்ரவேலர் நேகெப் என்னும் ஊருக்குத் தெற்கே விவசாயத்தையும், மந்தை மேய்க்கும் தொழிலையும் மேற்கொண்டு வாழ்ந்தனர். பின்பு கானான்நாட்டில் பிரவேசித்த பொழுது அவர்கள் இவ்விரு துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்திருந்தனர்.

**சல்லாபம் :**

1. உடன்படிக்கையில் தேவன் எதை வாக்குப்பண்ணினார்? மக்கள் என்ன செய்வதற்கு ஒத்துக்கொண்டனர்?

2. சீனாய்மலையில் தேவன் இஸ்ராயேலருடன் செய்த உடன்படிக்கையைக் கிறிஸ்து மனுக்குலத்துடன் செய்த உடன்படிக்கையோடு ஒப்பிடுக.

3. யாத்திராகம நிகழ்ச்சியிலிருந்தும், உடன்படிக்கையிலிருந்தும் தேவன் தமது இயல்புகளைப்பற்றி வெளிப்படுத்தியிருப்பது என்ன?

4. "சீனாய்மலையில் செய்த உடன்படிக்கையில், கடவுள் அன்பிற்கு இஸ்ராயேலர் செய்யும் பிரதி அன்பு பத்துக் கற்பனைகள் ஆகும்." இதை விளக்குக.

5. "சீனாய்மலையில் தேவன் தம்மக்களுடன் செய்த உடன்படிக்கைக்கு இஸ்ராயேலரது சரித்திரத்தின் பிரதான சம்பவங்கள் வழிகோலின" என்பதைச் சுருக்கமாகவிளக்குக.

### தேவன் இஸ்ராயேலருக்கு ஒரு பூமியைக் கொடுக்கின்றார்

மோயீசன் வாக்குப்பண்ணப்பட்ட பூமியை அடையவில்லை, அவருக்குப் பதிலாக யோசுவா இஸ்ராயேலரின் தலைமைப் பதவியை ஏற்றார். (யோ. 1:1—2) அக்காலத்தில் நிலவிய பொது அரசியல் நிலை இஸ்ரவேலருக்குச் சார்பாகவிருந்தது. பெரும் சாம்பிராச்சியங்கள், ஒன்றில் நிலைகுலைந்திருந்தன; அன்றேல் ஆரம்பநிலையிலிருந்தன. அவைகள் தத்தம் உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கியிருந்தன. கனானேயரும் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தம் கோட்டைகளுக்குள் பதுங்கியிருந்தனர். தேவன் தன் மக்கள் கனானேய நாட்டிற்குட் செல்ல ஒரு தகுந்த நேரத்தைத்தெரிவு செய்திருந்தார். ஆயினும் இதற்குள் பிரவேசிப்பது இலகுவாகவிருக்கவில்லை. இரத்தத்திற்கு ஊடாகவே கனானேய நாட்டை அடைய வேண்டுமென்பது எல்லோருக்கும் தெளிவாயிற்று.

### மேற்கொள்ள வேண்டிய கஷ்டங்கள்

தேவன் தமது செய்தியை, கனானேய நாட்டின்மீது படையெடுக்க ஆயத்தமாயிருந்த இஸ்ராயேலருக்கு யோசுவா மூலம் தெரிவித்தார் (யோசு. 1: 5—6). ஆகையால் தேவனுடைய நாமத்தினாலே யோசுவா கனானேயரை எதிர்த்து ஒன்றன்பின் ஒன்றாக அவர்களுடைய பட்டணங்களைக் கைப்பற்றினர். சிறிது சிறிதாக கனானேய நாட்டின் தெற்குப் பகுதியையும் பின்பு வடபகுதியையும் வெற்றி கொண்டார். பின் அதைப் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்து இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பங்கிட்டனர். கரையோரமாயிருந்த செழிப்பான புற்தரைகளும், பலமான கோட்டைகளாற் பாதுகாக்கப்பட்ட யெருசலேம் போன்ற பட்டணங்களும், கனானேயரின் கையில் விடப்பட்டன. வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளுள் அங்குமிங்கும் இஸ்ரவேலர் சிதறுண்டு இருந்ததினால் தமது ஒற்றுமையை இழந்து, பிற சாதியார்களுடன் கலப்புறும் ஆபத்துக்குள்ளானார்கள். அத்துடன் அஞ்ஞானிகளான, கனானேயர் அருகிலிருந்ததினால் இஸ்ரவேலர் தமது தேவனைக் கைவிட்டு அஞ்ஞான சமயங்களைக் கைக்கொள்ளும் ஆபத்துமிருந்தது. சிலோன் நாட்டில் வாக்குத்தத்தப் பேழை வைக்கப்பட்டிருந்தமையானது இஸ்ரவேலர் தமது தேவனை வழிபட அங்கு செல்லும் அவசியத்தை ஏற்படுத்தி அவர்களை ஒருவகையில் ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தது. மேலும் அங்குமிங்கும் அநேக வழிபாட்டு ஸ்தலங்கள் கட்டப்பட்டன.

வாக்குத்தத்தப் பேழையில் பத்துக் கற்பனைகள் வைக்கப்பட்டன. இங்கு இஸ்ரவேலர் தேவனுக்கு வணக்கம் செலுத்தக் கூடுவர். யோசுவா தள்ளாப்பராயம் அடைந்ததும் இஸ்ரவேல் மக்களை அழைத்துத் தேவனின் உடன்படிக்கையை அவர்களுக்கு நினைவூட்டினார். (யோ. 23 : 2—7) இஸ்ரவேலரும் தாம் அவ் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதாக ஏகமனதாய் வாக்களித்தனர் (யோசு. 24 : 16—24)

### தேவன் இஸ்ரவேலருக்கு நியாயாதிபதிகளைக் கொடுத்தல்

வாக்குப்பண்ணப்பட்ட பூமியில் (இவர்கள் குடியேறிய முதற் பகுதியில்—150வருடங்கள்) தெரிந்தெடுக்கப்பட்ட சனங்களுக்கு ஏற்பட்ட சரீர சம்பந்தமான, ஞான சம்பந்தமான ஆபத்துக்களைப் பற்றி நாம் நியாயாதிபதி ஆகமத்திலிருந்து அறிகிறோம். கனானேயரின் அதிகாரம் நசுக்கப்பட்டிருந்த பொழுதிலும் அவர்களில் அனேகர் வர்த்தகத் துறையில் முன்னேறி வந்தனர். அவர்களுடைய இலகுவான சீவியத்தாற் கவரப்பட்டு இஸ்ரவேலர் பலர் தங்கள் உடன்படிக்கையை மீறிக் கனேயருடைய பொய்த் தெய்வங்களை ஆராதிக்கத் தொடங்கினர். எனினும் தேவன் இஸ்ராயேலரைக் கைவிடவில்லை. நியாயாதிபதிகள் என அழைக்கப்பட்ட ஒரு குழுவினரைத் தலைவர்களாக அனுப்பி யூதமக்கள் தம்மில் விசுவாசமும் நம்பிக்கையும் கொள்ளும்படி தூண்டச் செய்தார். நியாயாதிபதிகள் பெரும்பாலும் இராணுவத் தலைவர்களாகவும், விடுதலை வீரர்களாகவும் இருந்தனர். இவர்கள், பலத்தையும் இராணுவ தந்திரத்தையும் கொண்டே மக்களை ஆண்டனர். இஸ்ரவேலரின் எதிரிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றினர்.

ஒத்தோனியல், அட், டெபோரு, பறக், கெடியோன், அபிமெலக், ஜப்தே, சாம்சன், ஆகியோர் இந்த நியாயாதிபதிகளிற் சிலராவர் இவர்களைக் கருவியாகக் கொண்டு தேவன் தனது மக்களை அவர்களது எதிரிகளிடமிருந்து காப்பாற்றி, உடன்படிக்கையையும் அடிக்கடி அவர்களுக்கு நினைவூட்டினார். இவ்வேளையில் இஸ்ரவேலருக்கு பிலிஸ்தியரிடமிருந்து பெரும் ஆபத்தி நேரிட்டது. இச்

[மறுபக்கம் பார்க்க]

## நிலவே நீ சொல் !

ஆம்ஸ்,

எண்ணிறந்த ஆசைகளை, என் நெஞ்சில் ஆடவிட்டு
கண்மறைத்துக் காரிருளில், கைகட்டி நிற்பதென்ன?
உன் அழகுத் தண்முகத்தை, ஒரு முறை நான் பார்த்திடவே
மண்ணகத்தில் நிற்கின்றேன், மறைந்திருக்கும் மர்மமென்ன?

நிலா.

வெண்ணிறத்து வீரனே கேள், வேறொன்றும் இங்கில்லை
என்னகத்தில் உன்னினைவால், ஏங்கிநான் காதலானேன்
மண்ணகத்தில் நீ இருந்து, வந்த அந்நாள் முதலாய்
மாறாத காதலானேன், மன்னவனே உன்னினைவால்;

ஆம்ள்.

காதல் எந்தன் மீதிலென்றால், நாணமுனக்கேனடியோ?
காரிருளில் நீ மறைந்து, கண்சிமிட்டல் ஏனடியோ?
அந்தமுகம் காணவந்த, இந்த ஆம்ஸ்ரோங்கிடமும்
மூந்த முந்தப் பழகியபின், இந்த நிலை ஏனடியோ?

நிலா.

எந்தன் அழகுமுகம், ஏறெடுத்து நீர் பாரும்
உந்தன் நினைவலைகள், ஓர் பக்கமாயிருக்க
நிந்தன் பத அடிகள், நிலையாய் நிற்பதுபோல்
எந்தன் உளக்கோயில், சொந்தங் கொள்வதெப்போ?

ஆம்ஸ்.

அப்போலோ பதினொன்றைப் போல், ஐம்பது நான் அனுப்பிவைப்பேன்
கப்பலோ ஆனாலும், காதல்—கவிதைபல புனைந்துவைப்பேன்
தப்பெல்லாம் இல்லாமல், தரணிதனக்கவைகள் வந்தால்
சிக்கெல்லாம் இல்லாமல், தேவிஉனை மணமுடிப்பேன்.

நிலா.

பறக்கும் கொடியினிலும். பார்க்குமெல்லா இடத்தினிலும்
இருக்கும் ஈகிளிலும், இந்த எல்லா இடங்களிலும்
உலகத்திருவுருவே, உன்னையே நான் காணுகிறேன்
இலகுக் கிளியதுபோல், இருப்பேன் உனைக்காத்து.

நிமால் குணரெட்ணம்,
மடத்துவீதி, மன்னார்.

---

**திரு. சந்தியோ அந்தோனிப்பிள்ளை அவர்கள் மறைவின் 3ஆம் வருட நினைவு**

பிறப்பு: 26-12-1908 இறப்பு: 15-8-1966

"சீவியத்தில் அவர் எம்மை நேசித்தார்;
மறைவில் என்றும் அவரை நினைவு கூருகின்றோம்."

சருவேசுரா, இரக்கம் புரிகிறதும், பொறுத்தல் அளிக்கிறதும் எப்பொழுதும் உம்து திருவுளத்தின் இயல்பாமே. ஆதலால் இவ்வுலகத்தினின்று அழைக்கத் தேவரீர் திருவுளமான இவருடைய ஆத்துமத்தைச் சத்துருவசம் அளிக்காமலும், கடைசிபரியந்தம் அதைக் கைவிடாமலும் இருக்கத் தேவரீரைப் பிரார்த்திக்கின்றோம்.

"சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவரின் பிரிவால் துயருறுவோர்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.

42|5, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம். 93-69

* * *

**பெர்னதேத்தம்மா பிரான்சிஸ் அவர்கள் அமலனடிசேர்ந்த எட்டாம் வருட ஞாபகம்**

பிறப்பு: 6-7-1916 இறப்பு: 12-8-1961.

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஆவணிமாதம் 12-ந்தேதி செவ்வாய்க்கிழமை (12-8-69) காலை6மணியளவில் பருத்தித்துறை அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் ஒரு திக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் மற்றும் பந்துமித்திரர் அனைவரும் இவவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக் கொடுத்தருளும் சுவாமி! சமாதானத்தில் இளைப்பாறுவாவாக."

இவவின் பிரிவால் துயருறும்: அருமைப் பத்தா ம. பிரான்சிஸ்சும், பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும். 92-69

* * *

**சூ. பேதுருப்பிள்ளை (பீற்றர்) அவர்களின் 3-ம் வருட மரண நினைவு**

தோற்றம்: 31-8-1912 மறைவு: 11-8-1966

"வாழ்வில் நேசித்த உம்மை மரணத்தில் மறவோம்"

மண்ணில் மறைந்தாலும் எமது அகக்கண்களைவிட்டகலா பேதுருப்பிள்ளை (பீற்றர்) அவர்கள் இறைவனடிசேர்ந்த மூன்றுவதாண்டு 11-8-69 திங்கட்கிழமை பூர்த்தியாகிறது. அன்றையதினம் வசதிக்குறைவாக இருப்பதால் அதற்குமுன்பு 7-8-69 வியாழக்கிழமை அன்னாரின் ஆன்மசாந்திக்காக வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் காலை 6-15மணிக்கு ஒரு திக்கப் பாடல்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சந்நியாசர், கன்னியர் மற்றும் விசுவாசிகள் அனைவரும் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம். இவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி: பே. அன்னபூரண ராசநாயகம். பெருமகன்: அ. ஞானமுத்துப்பிள்ளை செல்வராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஆயுள்வேத சங்க புதிய தலைவர் வைத்திய கலாநிதி எஸ். பி. ஈ. இன்னுசித்தம்பி

இலங்கை சித்தஆயுள்வேத வைத்திய சங்கத்தினர் கொழும்பு ஆயுள்வேத கல்லூரி மண்டபத்தில் சென்றவாரம் நடத்திய தமது 38-வது வருடாந்த கூட்டத்தில் தமது சங்கத்தின் புதிய தலைவராக வைத்திய கலாநிதி எஸ். பி. ஈ. இன்னுசித்தம்பி அவர்களை ஏகமனதாகத் தெரிவு செய்து கொண்டனர். இச் சங்கம்38வருடங்களுக்குமுன் நிலைநாட்டப் பட்டபோது அதன் ஆரம்பவருடத் தலைவராக, பரம்பரை வைத்தியத்தில் தலைசிறந்தவர்களில் ஒருவராக விளங்கிய இவரது தகப்பனார் காலஞ்சென்ற வைத்தியர் எஸ். எஸ். இன்னுசித்தம்பி அவர்கள் தெரிவு செய்யப் பட்டதும், தந்தையிருந்த இடத்தில் தனயன் தலைவராக இப்போது அமர்த்தப்பட்டிருப்பதும் மகிழ்ச்சிக் குரியதன்றோ. புதிய தலைவர் ஆற்றிய பேருரையில் சங்கம் வற்புறுத்தியிருக்கும் ஒழுக்கநெறியில் ஆயுள்வேத வைத்தியர் யாவரும் ஒழுகுவாராயின் அவர்களது புகழுக்கு ஈடில்லையெனக் கூறி, அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலையும் வைத்திய கல்லூரியும் யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டப்பட வேண்டுமென சங்கஆரம்பகாலத்தில் தம் முன்னோர் கண்டகனவு நனவாகத் தம்மாலானவற்றைச் செய்ய வாக்குறுதி அளித்தார்.

## சமூகமே ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவும்தான் என் காதில் விழுந்தது. அதற்குள் நான் அந்த வீட்டைக் கடந்து சென்று விட்டேன்.

யாழ்நகரில் பஸ் நின்றதும், சிந்தனையிலிருந்து விடுபட்டது மனம். என் அலுவல்களை முடித்துவிட்டு மூன்றுமணிக்கு திரும்பவும் பஸ் எடுத்தேன் இளவாலைக்கு. பஸ்சில் என் சின்ன அண்ணன் இருந்தார். இருவரும் இளவாலையில் இறங்கி வீட்டை நோக்கி நடந்தோம். மேற்படி மகாராணியின் வீடும் கிட்டியது. அண்ணனுக்கு, காலையில் நான் வரும்போது நடந்த விஷயத்தைச் சொன்னேன். அண்ணனின் நடையில் புதுமெருகு. கழுத்துப்பட்டியைச் சரிசெய்து கொண்டார். சப்பாத்தை லாவகமாகத் தரையில் வைத்து நடந்து வந்தார். எதிரே திடீரென மேற்படி மகாராணியும் அவளின் இளைய இளவரசியும், நாலு ஐந்து தென்னை ஓலையையும், ஐந்தாறு பனங்காயையும் கொண்டுவந்தனர். அவர்கள் சமீபத்தில் வந்ததும் அண்ணன் உச்சஸ்தாயியில் ஆங்கிலத்தில்பேசதொடங்கினார்.

காலையில் அட்டட்டாரே என்று துள்ளிக்குதித்த மகாராணியாரும், இளவரசியும் இப்போது மவுனமாக தலையைக் குனிந்துகொண்டு போகிறார்கள் ஏன்? சமூகமே டாட்டா!

(யாவும் கற்பனை)

## திருமண ஜூபிலி விழா 16-8-69

ஜோண்பிள்ளை யோசெவ் வாஸ்
மேரி கருணையம்மா

எங்களின் நேசத்தாய், தந்தையின் திருமண ஜூபிலி விழாவுக்கு நன்றியறிந்த தோத்திரமாக மருதமடுத் திருப்பதியில் ஆவணிமாதம் 16-ந்தேதி திவ்விய பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் குருமார், சந்நியாசர், கன்னியர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எமக்காக மன்றாடும்படி தயவாகவேண்டுகிறோம்.

பிள்ளைகள்: ஜூலியன் வாஸ், பமெலாவாஸ், இமெல்டா வாஸ், சியாமளா வாஸ்.

89-69.

## யாழ்ப்பாண கடற்சாரணர்

இலங்கைச்சாரணர்சங்கத்தின் சமூகசேவைக்கான "சலேஞ் கேடயத்தை" யாழ். புனித கிறிஸ்தோப்பர் கடற் சாரணர்கள் 26-7-69 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் இராணி மாளிகையில் இலங்கையின் மகா தேசாதிபதியும், இலங்கைப் பிரதம சாரணருமான மாட்சிமைதங்கிய வில்லியம் கொப்பலாவ அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இப்பரிசளிப்பு வைபவத்தின்போது இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து வந்தமாவட்டசாரண ஆணையாளர்களும், சாரணராளர்களும், சாரணர்களும் சமுகமளித்திருந்தனர். அவ்வேளை யாழ்ப்பாணம்கடற்சாரணர் இயக்கப் பிரதிநிதிகள் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட சாரணியக்கத்தின் 1968 ஆம் ஆண்டுக்கான சமூகசேவைக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டவர்களும்யாழ்ப்பாணக் கடற்சாரணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரட்சணிய சரித்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சாதியினர் தென் மேற்குப் பக்கத்தில் குடியேறி பலஸ்தீனத்தின் மறு பாகங்களுக்குட்புகத்தொடங்கின.ர்இரும்புக் கைத்தொழிலில் நிபுணத்துவம் வாய்ந்த பிலிஸ்தியர், ஆயுதப் பலம் மிக்கவர்களாய் விளங்கினர்.

வடக்கிலிருந்த கனானேயக் கோட்டைகள் யோசுவாவின் தாக்குதல்களைத் தாங்கிய பொழுதிலும் இப்போது இஸ்ரவேலருக்கு அபாயம் வருவிக்கும் நிலையிலிருந்தன. பிலிஸ்தியரையும் கனானேயரையும் ஒரேநோத்தில் எதிர்க்க வேண்டிய நிலையிலிருந்த இஸ்ரவேலர், சமய பந்தனம் ஒன்றினால் மாத்திரம், அதுவும் பலவீனமடையும் இப்பந்தனத்தினால் மாத்திரம் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தனர். ஆகையால் நாலா பக்கத்திலிருந்து தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். நியாயாதிபதிகள் இஸ்ரவேலருக்குச் செய்யக்கூடிய உதவியானது, மட்டுள்ளதாயும் தற்காலிகமானதாயுமிருந்தது.

# அண்ணல் சவரிமுத்து அமரரானர்

—:( ஆசிநாதர் ):—

போற்றும் மதப்பணியிற் பூவில் உனக்குநிகர்
ஏற்ற எவரும் இலையெனறே—சாற்றலாம்
மெய்யாய் வருந்துகிறோம் மேலோன் சவரிமுத்து
ஐயா இறந்தார் அயர்ந்தேம்.

மின்னுமல் முழங்காமல் இடியிடித்த
மாதிரியாய் எம்அதிபன் சவரிமுத்து
இன்னாளில் எமைப் பிரிந்தான் ஏங்கலானோம்
இன்றெமது முதல்வனையே இழந்துவிட்டோம்
பொன்னான பெருமகனைப் பிரிந்துவிட்டோம்
பெருமறையின் பேராளன் பறந்துவிட்டான்
என்சொல்வோம் எமக்குஇது இழப்பேயாகும்
ஏக்கத்தைப் போக்கவழி இன்றேஎன்பேம்.

❋

உயர்ந்தஉடல் உயர்ந்தகலை உயர்ந்தஉள்ளம்
உயர்ந்தமதி உயர்ந்தமனம் உயர்ந்தபண்பு
மயக்கமறு மதசேவைப் பணிகளுக்கு
மன்னவனாய் இல்லறத்தார் மாமணியாய்த்
தயக்கமிலாத் தக்கோனாய் கலைஞரேறாய்த்
தாய்மறைக்கும்தமிழ்மொழிக்கும்தலைமைதாங்கித்
துயர்பொங்க நடுவழியிற் தவிக்கவிட்டுத்
தூயமோட்ச நகரடைந்தான் சவரிமுத்தே.

❋

சொல்லுவதில் எழுதுவதில் செயல்முறையில்
சோராது கடமைசெய்து கருமமாற்றும்
வல்லபத்தில் நல்லறிவில் வாய்மைவாக்கில்
வழுவற்ற இல்வாழ்க்கை நடத்துவதில்
எல்லவர்க்கும் எரிவிளக்காய் எடுத்துக்காட்டாய்
எத்துறைக்கும் இலக்கியமாய் இலங்கிநின்றான்
நல்லவனாய் நாடறிய நேற்றிருந்தான்
நாமலற இன்றிறந்தான் நடுக்கமாமே.

❋

ஆழமுள பொருள்பொழியக் 'காவல்'ஏட்டில்
அழகொழுக எழுதியன படித்துப்பார்த்தால்
சூலையென மதப்பண்பு எரியக்காணும்
சோபிதமாய் மறைவிதிகள் மலியத்தோன்றும்
ஊழிதொறும் இவன்கருத்து உறுத்திக்காட்டும்
உண்மைத்தமி ழினத்துக்குந் திருமறைக்குந்
தோழனெனத் தொண்டனெனத் தலைவனெனத்
தோன்றிநின்றான் முத்திபெற்றான் சவரிமுத்தே.

மன்னுபுகழ் மாமேதை சவரிமுத்து
மாதிரியைக் குறிக்கோளாய்க் கொள்ளவேண்டும்.
சொன்னதெல்லாம் அவனைப்போற் காக்கவேண்டும்
சோராமல் மறைபரப்ப முயலவேண்டும்
தன்னலமே காணாத தன்மைவேண்டும்
தண்ணளியாய்க் குலவுகின்ற எளிமைவேண்டும்
சின்னவனோ பெரியவனோ பிரிவில்லாமல்
சமனென்று கருதுகிற பண்புவேண்டும்.

❋

இல்லறத்தார் அனைவருக்கும் சவரிமுத்து
ஏந்தலிவன் இனியவொரு எடுத்துக்காட்டாய்
வல்லமனை மக்கள்தமை மதிப்புமேவ
வளர்ப்பதிலே இவனைப்போற் பழகவேண்டும்
நல்லறிவு நல்வாழ்வு பயிற்றுவித்து
நாடுபுகழ் மாண்பினராய் ஆக்குவித்து
எல்லாரும் இல்வாழ்வு இன்பங்காண
இப்பெரியோன் வாழ்நெறியில் வாழவேண்டும்.

❋

தனதுமதம் தனதுஇனம் தழைக்கவேண்டில்
தனதுயிரைக் கொடுப்பதற்குந் தயங்கிடாமல்
அனுதினமும் அயராதுவாழ்ந்த வாழ்வை
அனைவருமே கண்டிங்கு அதிசயிப்போம்
புனிதமதப் பேரறிஞன் சவரிமுத்துப்
போல்நாமும் புகழ்வாழ்வு புரியவேண்டும்
தனிப்பெருமை கொடுத்தென்றும் போற்றவேண்டும்
இவனான்மா சாந்தியுறப் பிரார்த்திப்போமே.

கிளிநொச்சி
4-8-69.

"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"
ஏ. எவ். றேமண்ட்ஸ்,
147, மெயின்வீதி,
யாழ்ப்பாணம்.
குறைந்த செலவில்
மனம்நிறைந்த
அந்தியசேவை
ரூபா 175/-
உயர்தர பிரேதப்பெட்டிகள்
ரூபா 50/-

## உகண்டா சென்று....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் நிறுவப்பட்ட பலிப்பீட அபிஷேகம் ஒன்றாகும். மற்றொன்று ஆபிரிக்கசண்ட மேற்றிராணிமாரது மகாநாட்டில் பங்குபெற்றதாகும். பரிசுத்ததந்தை ஆபிரிக்கா சென்ற நல்லதருணத்தை உபயோகித்து அக்கண்டத்தில் இன்று மிகபரிதாபத்துக்குரிய நிலைமையை உண்டாக்கிய நைஜீரிய -பயபிருகலகத்தை முடிவு பெறச் செய்ய பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டன. இருபகுதிகளிலுமிருந்து பிரமுகர் குழுக்கள் பாப்பரசரைக் காணக்காத்து நின்றனர். இவர்களுடன் இது விஷயமாகக் கலந்து ஆலோசித்தனர். பரிசுத்த தந்தை அவர்களுக்கு நற்புத்தி புகட்டினர்.

மீளவும் வத்திக்கானில்:

றோமாபுரிக்கு வரும்வழியில் விமானத்திலிருந்தே பரிசுத்த தந்தை தனது பிரயாணத்துடன் தொடர்புகொண்ட யுகன்டா, சூடான், எகிப்து, மோல்தா, இத்தாலிதேச தலைவர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார். பிரயாணத்தின்போது பத்திரிகை நிருபர்கள் சுமார் 50 பேர் பாப்பரசருடன் விமானத்தில் பிரயாணம் செய்தனர். அவர்கள் ஒவ்வொருவருடனும் கைகுலுக்கி அன்புடன் உரையாடினார். பரிசுத்த தந்தைக்கு தான்செய்த ஆபிரிக்க பிரயாணம் பெரும் சந்தோஷம் கொடுத்திருப்பதாகவும், நைஜீரியா—பயபிரு பற்றிய நிலைமையில் அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். றோமாபுரி விமானத்தில் இத்தாலிதேச பிரதமரும் பிரதான உத்தியோகஸ்தர்களும், திருச்சபை அதிகாரிகளும் அவரைச் சந்தித்து வரவேற்றனர். மீளவும் பரி. தந்தை தமது கோடைகால வாசஸ்தலத்தைச் சென்றடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆவணி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 10 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 11-ம் ஞாயிறு | [ப] |
| 11 | திங்கள் | கிழமைப் பூசை | [ப] |
| 12 | செவ்வாய் | புனித கிளாறம்மாள் | [வெ] |
| 13 | புதன் | கிழமைப்பூசை | [ப] |
| 14 | வியாழன் | புனித கன்னிமரியின் விண்ணேற்பு விழாவின் திருவிழிப்பு | [ஊ] |
| 15 | வெள்ளி | புனித கன்னிமரி. விண்ணேற்பு | [வெ] |
| 16 | சனி | புனித யுவக்கீம் | [வெ] |

# காவலன் கருத்து

## கல்வி நூற்றாண்டு

அரசாங்க ஆதரவின்கீழ் இயங்கும் கல்விமுறை இலங்கையில் ஏற்பட்டு நூறுண்டுகள் பூர்த்தியாகி விட்டன. இந்த வைபவத்தை அரசாங்கக் கல்விப் பகுதி பெரும் ஆடம்பரத்துடன் கொண்டாடுகின்றது. நூறு வருடங்களாக நமது நாட்டில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியைக் குறித்து நாம் பெருமைப்படலாம். காலத்துக்குக் காலம் கொண்டு வரப்பட்ட திருத்தங்களால் எமது கல்வி அளவிலும், தரத்திலும் அபிவிருத்தியடைந்து வந்துள்ளதென்பது உண்மை. கட்டாய இலவச கல்வியினுல் எழுத்து வாசனையற்ருேர் தொகை மிகக் குறைந்துவிட்டது. புகழ்பெற்ற கல்விமான்கள் பலரையும் கொண்டு இலங்கை பெருமைப்படுகிறது.

ஆனுலும், எமது கல்வித் திட்டத்தில் எத்தனையோ குறைபாடுகள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது. இன்றும் எல்லாம் திருப்திகரமான முறையில் நடைபெறவில்லை என்பதும் வெளிப்படை.

அரசாங்கம் கல்வியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்போது அது தனது ஏனைய கொள்கைகள், வேலைகள் ஆகியவற்றுக்குப் பொருத்தமான முறையிலேயே கல்வியையும் நடத்தி வருவது தவிர்க்க முடியாதது. உதாரணமாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கச் சிப்பந்திகளை உற்பத்தி செய்யவே கல்வி பெரும்பாலும் பயன்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றபின் நாட்டின் தேவைகளுக்கேற்றபடி பல்வேறு தொழிற் துறைகளுக்கு மக்களைப் பயிற்றவும் உதவியது. அத்துடன் தேசிய மொழிகளும் கல்வி போதிக்கும் கருவியாயின. இன்றைய நிலையில் நாட்டின் ஆக்கத்துக்கு உழைக்கக்கூடிய தொழிலறிவுடைய மக்களைப் பயிற்றவேண்டியது அவசியமாகவே இருக்கின்றது. வேலையில்லாத்திண்டாட்டம் மலிந்துள்ள இந்நாட்களில் அளிக்கப்படவேண்டிய கல்வியும் தேவையைப் பொறுத்துத்தான் இருக்கின்றது.

எனவே, இலங்கையின் கல்வி கடந்த 100 ஆண்டுகளாகவே உத்தியோகம் அல்லது தொழிலையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்திருக்கிறது. இந்த நோக்கு தவிர்க்கமுடியாத ஒன்ருக இருக்கலாம். ஆனுல், அதே சமயத்தில் கல்வியின் பயன் உத்தியோகம் மட்டுமல்ல. அதைவிடப் பரந்தது என்பதை மறந்துவிடலாகாது. ஒருவனுடைய தொழிலுக்கு அவனது கல்வி உதவக்கூடும். ஆனுல், அத்துடன் நின்றுவிடாது வாழ்க்கையையே வளம்படுத்துவதாக இருக்கவேண்டும். பற்பல விஷயங்களை மூளையில் திணித்துப் பரீட்சையில் சித்தியடைவது உண்மையான கல்வியல்ல. கல்வி உள்ளத்தைப் பண்படுத்தவும், ஒழுக்கத்தை வளர்க்கவும் வேண்டும். அத்தகைய கல்வி சமய அடிப்படையில் அமையவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். மனதைப் பண்படுத்தாத கல்வியின் விளைவை இன்றைய படித்த இளைஞரின் சீர்கேடுகளிலிருந்து காண்கிறேம். உண்மையான கல்வி ஒருவன் தன் தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு மட்டுமல்ல, மக்களைக் கண்ணியமாக நடத்தவும், லஞ்சம்கோரி கைநீட்டாதிருக்கவும், பிறருக்கு வழிகாட்டியாய் நடக்கவும் வேண்டிய மனப்பக்குவத்தை அளிப்பதாகும். கல்வியெல்லாம் இலௌகீக மயமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இச்சிந்தனைகளை மனதிற் கொள்வது நன்று.

வண. பிதா
எல். அந்தோனிப்பிள்ளை, O.M.I.
அவர்களின்

## குருத்துவ வெள்ளி விழா

சேந்தாங்குளம் பங்குக்குரவரான வண. பிதா எல். அந்தோனிப்பிள்ளை, ஓ. எம். ஐ. தமது குருத்துவ வெள்ளி யூபிலிவிழாவை நிகழும் ஆவணிமாதம் 9-ந்தேதி கொண்டாடுகிறர், கடந்த 25 ஆண்டுகளாக யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்கு அரும்பணியாற்றிய இவருக்கு இத்தருணத்தில் நாம் சுபசோபனங் கூறுவதோடு இவர்மூலமாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக.

இவ்வருங் குரவர் தமது தேவதொண்டை இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆற்றத் தேவையான சகல வரப்பிரசாதங்களையும் இறைவன் இவர்மேல் பொழிவாராக.

புனிதர் தோமஸ்மூர்

## மாபெரும் மனிதன்

சுமார் 400 வருடங்களுக்கு முதல் ஆங்கிலநாட்டின் பாராளுமன்றத்தில் தலைமைப் பதவியைவகித்த புனித தோமஸ்மூர் அவர்களுக்கு லண்டன் நகரில் செலசியா பகுதியில் தெம்ஸ்நதி ஓரத்தில் முதன்முதலாக ஒருசிலை அரசாங்கத்தினரால் கட்டியெழுப்பப் பட்டிருக்கின்றது. அச்சிலையின் திறப்புவிழாவின் போது இன்று ஸ்பீக்கர்பதவி வகிக்கும் டக்றர் ஹொறஸ் கிங்என்பவர் புனித தோமஸ்மூரைப்பற்றிக் கூறும்போது "ஸ்பீக்கர் பதவியை வகித்த மாபெரும் மனிதன்" என அவரைப் புகழ்ந்தார். புனித தோமஸ்மூர் கத்தோலிக்க சமய உண்மைக்காகத் தனது உயிரையும் அர்ப்பணித்ததினுல் இன்று புனிதர்வரிசையில் உள்ள ஒருவராக வணங்கப்படுகின்ருர்.

அர்ச். லிகோரியார் எழுதிய

## நன்மரணத்துக்கு ஆயத்தம்

புதுப்பதிப்புச்செய்ய மேற்படி புத்தகம் ஒன்று தேவை. எனவே, அதை உதவக்கூடியவர், அதிவண. பிதா சற். என். குருஸ், ஓ. எம். ஐ., அமல உற்பவம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

94/69

"நீ மற்றவர்களது துக்க துயரங்களை உன்மேல் சுமந்துசெல்லக் கற்றுக்கொண்டாயானுல், ஆண்டவர் உனது துக்கதுயரங்களைத் தாம்தாமே சுமந்துகொள்வார்."

— ஒரு பெரியார்

## மனிதகுலத்தின் கூட்டுச்செபம்
### சந்திர வீரருடன் உயரப் பறந்தது

சந்திரனில் இறங்கும் துணிகரமான செயலில் ஈடுபட்டிருந்த வீரருக்கு மனுக்குலத்தின் செபம் செய்த உதவியை நாம் மட்டிட்டுக்கொள்ள முடியாது. பாப்பரசர் முதல் சிறுபாலர் ஈருக பலசமயத்தவர்களும் தேவனைப் பிரார்த்தித்துக் கொண்டே எங்கும் இருந்தனர். உலக அபிமானிகளுடன் சேர்ந்து வீரர்களின் குடும்பத்தினரும் தேவனைப் பிரார்த்தித்துக்கொண்டனர். றெக்சாஸ் பிரதேச ஹவ்ஸ்ரன் நகரில் புனித சின்னப்பர் தேவாலயத்தில் மைக்கல் கொலின்சின் பாரியாரும், அவர்களது இருசிறு குழந்தைகளும் பூசைப் பலியில் பங்குபெற்றுக்கொண்டனர். 245,000 மைல்களுக்கு அப்பாலிருந்தே அல்ட்றின் என்பவர் தமது பகுதியில் நடந்த தேவ ஆராதனைகளில் அந்நேரத்திலேயே பங்குபெற்ருர். அல்ட்றின் பிறிஸ்பிற்றேறியன் மதத்தினர். விண்வெளிப் பிரயாணம் ஆரம்பிக்குமுன் அவரது சமயக்குரு அவருக்குக் கொடுத்த நற்பிரசாதஅப்பத்தை அவர் தன்னுடன் எடுத்துச் சென்று அங்கு உட்கொண்டார். திருமதி ஆம்ஸ்ரோங்கும், பிள்ளைகளும் வீட்டிலிருந்தே தேவனை மன்ருடிக்கொண்டார்கள்.

# மறைந்த முத்து

அலைகடலிற் கண்டெடுக்க முடியாமுத்தே!
அன்பினெளி தந்துநின்ற ஆணிமுத்தே!
கலைநிறைந்த பெட்டகமாய் மிளிர்ந்தமுத்தே!
கபடறியாக் குழந்தையென ஒளிர்ந்தமுத்தே!
விலைமதிப்பிற் கடங்காத அறிவுச்செல்வம்
விளைந்துகனிந் துருவான சவரிமுத்தே!
சிலையெனயாம் செயலிழந்து கண்ணீர்சிந்தச்
சென்ருேடி மறைந்தனையே எங்கே ஐயா?

●

மொழியெல்லாம் பனியூற்ருய் அமுதம்பொங்கும்
முழுநிலவே புன்சிரிப்பாய் நெஞ்சங்காட்டும்
விழியெல்லாம் அருள்வடிவாய் வேதவாழ்வின்
விளைநிலமாய்த் தெவிட்டாத விருந்தாயேகும்
வழியெல்லாம் பரிமளமாய் வையகத்தின்
வாடாத மணிவிளக்காய் வாய்மலர்ந்த
பொழிவெல்லாம் ஒளிகான்ற பொன்னே! உந்தன்
புகழுடலை நீத்தெங்கே சென்ருய் ஐயா?

●

பதவியிலே அதிபரெனப் புகழ்ந்தார்; ஆனுல்
பார்வையிலே பாமரனுய்த் திகழ்ந்தாய்; நின்பால்
உதவிதனைத் தேடிவந்தார் ஒருநாளேனும்
உன்னிழலில் தங்காது சென்ருரில்லை
நிதியுவந்து தருவதிலே முகிலாய் வாழ்ந்தாய்
நிறைகுடமாய்க் கலையுலகில் நிமிர்ந்தாய்; சத்ய
மதநெறியில் தளபதியாய் உயர்ந்தாய்; எங்கள்
மாதவமே! நீயெங்கே மறைந்தாய் ஐயா?

●

எழுத்துலகில் வற்ருத பேனு எங்கே?
இடியெனவே முழங்குகின்ற மொழிதான் எங்கே?
பழுத்தமரம் போல்வணங்கும் பணிவின் செல்வா!
பண்பெல்லாம் குடியிருந்த வடிவே! வாழ்வில்
உழுத்துலர்ந்த ஏழைகளின் கண்ணீர் கண்டு
உருகிநிதம் துடிதுடித்த உள்ளம் எங்கே?
முழுத்தனமும் பறிகொடுத்தே வறிஞரானேம்
முத்தமிழே! நீமறைந்து சென்ருய் எங்கே?

●

"நேற்றிருந்தார் இன்றில்லை இதுதான் இந்த
நீணிலத்தின் பெருமை" என வள்ளுவன்தான்
சாற்றியபொன் மொழியதன்பே ருண்மைகண்டே
சாந்திபெறக் கொடுந்துயரை அடக்குகின்ருேம்
ஆற்றினிலே துரும்பாக அலையும் வாழ்வின்
அநித்தியத்தை உணர்கின்ருேம்; வானவீட்டில்
வீற்றிருந்தே நீடுழி காலம் வாழ
வேண்டுகின்ருேம் நின்நினைவு மறவோம் ஐயா!

— யாழ். "ஜெயம்"

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆடு ஆவணி மீ 9ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org